விவிலியப் படக்கதை - 23

யோபு



யோபு

உடல்நலம், செல்வம், நீண்ட ஆயுள் யாவும் கடவுளது ஆசீரின் அடையாளங்கள் எனக் கருதுவது வழக்கம். அவை இல்லாதது கடவுளின் கோபத்தின் அடையாளம் என எண்ணுவர். திடீரென கடவுளின் ஆசீரை இழக்கும்போது அதை கடவுளின் தண்டனை என்பர். பழைய ஏற்பாடு பல குழந்தைகளைப் பெறுவதை கடவுளின் ஆசீராகப் பட்டியலிடுகிறது. விவிலியக் கால ஞானிகள் இந்த ஆசீரைப் பெறுவதற்கும், பாதுகாப்பதற்கும் உரிய வழிகளையும், முறைகளையும் அறிவுறுத்துகிறார்கள். எப்படியாயினும், ஒருவன் வாழும் காலத்தில் நன்மையை அல்லது தண்டனையை அனுபவிப்பான் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டதே 'நீதிமானின் துன்பம்' ஆகும்.

கிமு இரண்டாம் ஆயிரம் ஆண்டுகளின் துவக்க காலத்திலிருந்தே எகிப்திய, மெசபொத்தாமிய இலக்கியங்களில் இத்தகைய பழங்கால நம்பிக்கைகளுக்கு எதிரான எதிர்ப்பு இருந்ததற்கான ஆதாரங்களை நாம் காணமுடிகிறது. விவிலியத்தின் ஞான நூல்களில் ஒன்றான யோபு நூல் இத்தகைய மறுப்பு இலக்கியங்களின் தாக்கத்தையே பிரதிபலிக்கிறது.

யோபு ஒரு பிரமாணிக்கமுள்ள கடவுளின் ஊழியன் ஆவார். நல்ல உடல்நலமும், செல்வமும், ஏராளமான குழந்தைகளும் பெற்று வாழ்கிறார். திடீரென அவர் எல்லாவற்றையும் இழக்கிறார். அவரது மனைவிகூட அவரை இகழ்கிறார். அவருக்கு ஆறுதல் கூற வந்த ஆருயிர் நண்பர்கள் கூட பெரிய தவறுகளை அவர் செய்ததாக பழி சுமத்துகிறார்கள். கடவுள் நீதியானவர். யோபு சில கனமான பாவங்களைச் செய்தாலன்றி கடவுள் அவரைத் துன்புற அனுமதிக்க மாட்டார் என வலியுறுத்து கிறார்கள். அவர் மனம் வருந்தி கடவுளிடம் திரும்பினால், எல்லாவற்றையும் மீண்டும் பெறலாம் என்ற வாக்குறுதியால் அவருக்கு ஆறுதல் கூற முயற்சிக்கிறார்கள்.

யோபு ஒரு ஆழ்ந்த மனப் போராட்டத்தில் தத்தளிக்கிறார். ஒருபுறம் மரபு வழியிலான படிப்பினையின்படி கடவுள் நீதியானவர் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வாதாடுகிறார். மறுபுறம் ஆழ்ந்த துன்பத்தை அனுபவிப்பதுடன் தனது மாசின்மையையும் உணர்கிறார். தனது துன்பமும், பல ஆயிரக்கணக்கான மாசற்றவர்களின் துன்பங்களும் கடவுளின் நீதிக்கு நேர் முரணானதாகத் தெரிகிறது. கடவுள் தீயவர்களுக்கு நன்மை புரிந்து, மாசற்றவர்களைத் தண்டிக்கிறாரா? கிமு இரண்டாம் நூற்றாண்டில் இறப்புக்குப் பின்னர் உள்ள வாழ்வு பற்றி எழுந்த நம்பிக்கை குறைபாடு இந்தப் பிரச்சனையை இன்னும் முக்கியத்துவம் நிறைந்ததாக்குகிறது.

கடவுளின் அன்பு, இரக்கம் மீதான யோபுவின் நம்பிக்கை அவரது துன்பத்தை இன்னும் அதிகமாக்குகிறது. எனவே, அவரது வாதங்களும், குற்றச்சாட்டுகளும் தன் நண்பர்களுக்கு எதிரானதல்ல. மாறாக, கடவுளுக்கு எதிரானதாகிறது. கடவுள்தான் அவரை எந்தக் காரணமுமே இல்லாமல் சித்திரவதை செய்வதாகவும் யோபு உறுதியாக

விவிலியப் படக்கதை - 23

யோபு

எல்பின்

தியோ

நீதிமான்கள் துன்புறுவதும், தீயவர்கள் செழித்து வளர்வதும் எப்போதும் புரியாத ஒரு புதிராகவே உள்ளது. பாபிலோனிய அடிமைத் தளையிலிருந்து திரும்பி வந்த மக்களிடையே இந்தப் பிரச்சனை எப்போதும் விவாதிக்கப்பட்ட ஒன்றாகும்.




குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்படவில்லை.
நீ ஏன் அப்படி சொல்கிறாய்?
கண்களைத் திறந்து சுற்றிலும் பார்
தீயவர்கள் உண்டு கொழுக்கிறார்கள். அவர்கள் கடவுளுக்கோ மனிதனுக்கோ அஞ்சுவதில்லை.
மாசற்ற ஏழைகள் எப்போதும் புறம் தள்ளப்படுகிறார்கள். பசியாகவும், நிர்வாணமாகவும் அவர்கள் செல்கிறார்கள்.
இதற்குக் காரணம் அவர்கள் உழைப்பதில்லை.
நிலமில்லாதவர்கள் இரவு பகலாக உழைத்து என்ன சம்பாதிக்க முடியும்?
இது தவிர, போர் அல்லது கொள்ளை நோய் வரும்போது எவ்வளவு மாசற்றவர்கள் மடிகிறார்கள். நோயுற்றவர்களையும் ஊனமுற்ற குழந்தைகளையும் நீ எப்படி விளக்குவாய்?
அதோ குரு வருகிறார். நாம் அவரிடம் கேட்போம்.


குருவே, தீயவர்கள் வளமாக வாழும்போது நீதிமான்கள் துன்புறுகிறார்கள். இதை அனுமதிக்கும் கடவுள் நீதியானவர் என எப்படி கூறமுடியும்.
இந்தத் தீமைகளுக்கெல்லாம் காரணம் என்ன?
எல்லோருமே இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். ஒரு மனிதன் கடவுளிடமே இந்தக் கேள்வியைக் கேட்டார்.
அவர் பெயர் யோபு. ஊசு என்ற நாட்டில் வாழ்ந்து வந்தார்.
இவரைப் பற்றிதானா இறைவாக்கினர் எசேக்கியேல் பேசினார்?
ஆம். அவர் மிகப் பெரிய செல்வந்தர். ஆனால் மாசற்றவர், நீதிமான், கடவுளுக்கு விருப்பமுள்ளவர்.


யோபுவுக்கு ஏழு புதல்வர்களும் மூன்று புதல்வியரும் இருக்கிறார்கள்.
இன்று ஏழைகளுக்கான சாப்பாட்டு அறையில் எத்தனை பேர் உணவு உண்கிறார்கள்.
அது நிரம்பி வழிகிறது. ஒவ்வொரு நாளும் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது.
இப்படியே தொடர்ந்தால் நாம் விரைவில் அந்த அறையைப் பெரிதாக்க வேண்டி வரும்.
கடவுள் நம்மை நிறைவாக ஆசீர்வதித்துள்ளார். அதை நாம் ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
நல்ல யோசனைதான். ஆனால் நாம் இப்படி சாப்பாடு கொடுத்துக் கொண்டே இருந்தால் வேலை செய்ய மறுக்கும் பல சோம்பேறிகளைத் தான் உருவாக்குவோம்.
வேலை செய்ய முடிந்தவர்கள் நம் பண்டக சாலையில் உதவி செய்யலாமே.
ரொம்ப நல்லது. வேலைக்கு உணவா?


யோபு பல நாடுகளுடன் வியாபார உறவு கொண்டிருக்கிறார்.
எகிப்தில் நல்ல விளைச்சல் என்பதால் அங்கு கோதுமை மிக மலிவாக கிடைக்கிறது.
கடுமையான வறட்சியால் அராபியாவில் கோதுமைக்கு அதிகமான தேவை ஏற்பட்டுள்ளது.
எகிப்தில் தானியங்கள் வாங்கி கிழக்கத்திய நாடுகளில் வியாபாரம் செய்யலாம்.
பசியாயிருப்பவர்களுக்கு உணவு கிடைக்கும். நமக்கு லாபமும் கிடைக்கும். அராபிய குதிரைகளுக்கும், நல்ல தங்கத்திற்கும் எகிப்தில் நல்ல வரவேற்பு உள்ளது.
நமது வியாபாரத்தை இந்தத் துறையிலும் விரிவாக்கம் செய்ய வேண்டும். நாம் ஒபிரிலிருந்தே தங்கம் விலைக்கு வாங்க வேண்டும்.

நிலம் வழியாகவும், நீர் வழியாகவும் யோபுவின் வியாபாரம் செழிக்கிறது.



யோபு தந்தமும், வாசனைப் பொருட்களும் இந்தியாவிலிருந்து கொண்டு வருகிறார். ஓபீரில் தங்கம் வாங்குகிறார். எகிப்திலும் மெசபொத்தாமியாவிலும் அவற்றை விற்கிறார்.

கடல் கொள்ளையரிடமிருந்து பாதுகாக்க யோபுவின் கப்பல்களில் படை வீரர்கள் இருந்தார்கள்.

அதோ கடல் கொள்ளையர்கள். கப்பல் மூழ்குகிறது. யோபுவின் கப்பல்களைத் தொட துணிவு கொள்ளும் எவருக்கும் இதுதான் கதி.

உதவி!!!

யோபுவுக்கு ஆயிரக்கணக்கான கால்நடைகளும், ஆடுகளும், ஒட்டகங்களும், கழுதைகளும் இருந்தன. மத்திய கிழக்கு நாடுகளிலேயே அவர்தான் மிகுந்த செல்வந்தராவார்.

சீக்கிரம். இந்த வேகத்தில் வேலை செய்தால் இன்னும் இரண்டு மாதங்கள் ஆகும். குளிர் காலம் வருவதற்குமுன் இவற்றை கம்பளி போர்வைகளாக்கி நாம் பாரசீகத்திற்குக் கொண்டு சேர்க்கவேண்டும்.

யோபுவின் பிள்ளைகள் ஒருவர் பின் ஒருவராக முறைவைத்து அவர்களது வீடுகளில் ஒன்றுகூடி விழா கொண்டாடுவது வழக்கம். விழாவின்போது பல விளையாட்டுகளையும் நடத்துவார்கள்.

விழா முடிந்தபின் யோபு தன் பிள்ளைகளின் பாவங்களுக்காக பலி ஒப்புக் கொடுப்பது வழக்கம்.

எல்லாம் வல்ல கடவுளே, நானும் என் பிள்ளைகளும் செய்த பாவங்களை மன்னியும்.

ஒருநாள்

இன்றைய விழாவிற்கு நாம் போயிருக்க வேண்டும். ஒரு பிள்ளையின் வீட்டிற்கு மட்டும் நாம் விழாவிற்குச் செல்லாதது நல்லது அல்ல.

பரவாயில்லை. நாம் அடுத்த தடவை போகலாம். இன்று நான் ரொம்ப சோர்வாக இருக்கிறேன்.

ஏய், யார் வர்றது?

!


தலைவா, நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம்.
என்ன நடந்தது என்று சொல்லு.
மிதியானியர்கள் நம்மைத் தாக்கி, நம் கால்நடைகளையும், ஆடுகளையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். எல்லா மேய்ப்பர்களும் கொல்லப்பட்டார்கள். நான் மட்டும்தான் தப்பி இதை உங்களிடம் தெரிவிக்க வந்தேன்.
மற்றொரு பணியாள்
நம் பண்டகசாலைகள் எரிந்து விட்டன. தீயை அணைக்க முயன்ற பலரும் இறந்து விட்டார்கள்.
அங்கு வேறு யாரோ வருகிறார்கள்.
நம் வியாபாரிகள் கூட்டத்தைத் திருடர்கள் தாக்கிவிட்டார்கள். நம் ஒட்டகங்களையும் கழுதைகளையும் திருடி விட்டு நம் ஆட்கள் அனைவரையும் கொன்று விட்டார்கள். நான் மட்டும் தான் தப்பினேன்.
!?


இன்னொரு பணியாள்.
தலைவா, நம் கப்பல்கள் எல்லாமே புயலில் சிக்கி அழிந்து விட்டன.
மற்றொரு பணியாள்
தலைவா, உம் பிள்ளைகள்
என் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது?
?
அவர்கள் கூடியிருந்த வீடு பயங்கர சூறாவளி காற்றால் இடிந்து விட்டது. நான் மட்டும் தான் தப்பி இதை உம்மிடம் தெரிவிக்க வந்தேன்.
உதவி


ஐயோ, என் பிள்ளைகள்!
கடவுளே!
கடவுள்? இத்தனை ஆண்டுகளாக பிரமாணிக்கமாக அவருக்கு பணி செய்ததற்கு அவர் கொடுத்தப் பரிசைப் பாருங்கள்.
?
கடவுள் கொடுத்தார். கடவுள் எடுத்துக் கொண்டார். அவரது நாமம் வாழ்த்தப்படுவதாக.
இன்னும் கடவுளைப் புகழ்கிறீர்களா?
நிர்வாணமாக நாம் இவ்வுலகிற்கு வந்தோம். நிர்வாணமாகவே நாம் திரும்பிச் செல்வோம்.
நாம் கடவுளிடமிருந்து ஆசீர் பெற்றோம். இப்போது கஷ்டத்தையும் ஏற்க தயாராயிருக்க வேண்டும்.

துக்கத்தின் அடையாளமாக யோபு தலையை மொட்டை அடிக்கிறார். தாடியை மழிக்கிறார். உடலில் சாம்பலைப் பூசுகிறார். சாக்குடை அணிந்து (குப்பை மேட்டில்) அமர்கிறார்.

எவ்வளவு சீக்கிரமாக நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். ரொம்பவும் ஊரல் எடுக்கிறது. என் தோல் உரிந்து வருகிறது.

புழுக்கள்! நாற்றமடிக்கிறது.

!?

நாங்கள் போகிறோம்.

எல்லாம் அவரது விருப்பப்படியே நடக்கட்டும்.

நம்மிடம் இவ்வளவு கொடூரமாய் நடந்து கொண்ட கடவுளை இன்னும் புகழ்கிறீரா? சபித்து விட்டு செத்துப் போங்கள்.

நான் ஏற்கெனவே ஒரு இறந்த போன மனிதன். எனது சதைகள் அழுகிப் போனால் கூட நான் ஆண்டவரைப் புகழ்வேன். புழுதியிலிருந்து அவர் என்னைத் தூக்கி எடுப்பார்.

யோபுவுக்கு நேர்ந்த துன்பங்களைக் கேள்வியுற்ற அவரது நண்பர்கள் எலிப்பாசு, பில்தாது, சோப்பார் மூவரும் அவரைப் பார்க்க வருகிறார்கள்.

ஓ கடவுளே, என்ன கொடூரமான காட்சி!

மத்திய கிழக்கு நாடுகளிலேயே மிகவும் புகழ்பெற்ற யோபுவா இவர்?

தாங்க முடியாத வேதனையில் அவர்கள் கதறி அழுகிறார்கள். தங்கள் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு ஏழு நாட்கள் யோபுவுக்கு அருகிலேயே அமைதியாக அமர்கிறார்கள். இறுதியில்,






தீயவனின் மகிழ்ச்சி நீண்ட காலம் நீடிக்காது. அவன் விரைவிலேயே அழிவான்.
நீதிமான் பாதுகாப்பு பெறுவான். காட்டு விலங்குகள் கூட அவனுக்குத் தீங்கு இழைக்காது.
ஆண்டவர் உம்மைக் காயப்படுத்துவார். ஆனால் உம் காயங்களுக்குக் கட்டுபோடுவார்.
இந்தத் தண்டனையை கடவுளின் ஆசீராகக் கருதும். அவரைப் போற்றிடும். அது உமக்கு நன்மை பயக்கும்.


உங்களுக்கு என்னுடைய வேதனை தெரியாது. என் தோலின் வலிமை விட்டுப் போகிறது. என் உடல் முழுவதும் ரணமாகியுள்ளது. புழுக்கள் என் உடல் முழுவதும் நகர்கின்றன.
வல்லவரின் அம்புகளால் நான் துளைக்கப்பட்டுள்ளேன்.
பூமியில் மனித வாழ்வு வெறும் அடிமைத்தனத்திற்குள்ளானது. அடிமைகள் ஓய்வுக்காய் ஏங்குவதைவிட மேலாக நான் சாக ஆசைப்படுகிறேன்.
இந்த முடிவற்ற சித்திரவதையை அனுபவிப்பதைவிட என் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவது மேலானது.
என் வாழ்வு வெறும் மூச்சு காற்று தான். ஒரு நொடிப்பொழுதில் நான் மண்ணாகி விடுவேன். பின்னர் என்னைத் தேடினால் நீங்கள் கண்டுபிடிக்கமாட்டீர்கள்.


சாக வேண்டும் என்ற உமது ஆசையே நீர் பாவி என்பதை நிரூபிக்கிறது. கடவுள் ஒரு போதும் நீதியற்றவராக இருக்க முடியாது.
!
உம் பிள்ளைகள் கடவுளுக்கு எதிராக பாவம் செய்திருக்கக் கூடும். அவர்களுக்கு நேர்ந்தது அதற்குரிய தண்டனையாக இருக்கலாமே?!
நீர் ஒரு நீதிமானாக இருந்தால் கடவுள் உம்மைக் கைவிட மாட்டார். ஆனால், தீயவர்களை கடவுள் கண்டிப்பாகத் தண்டிப்பார்.
நம் முன்னோரிடம் கேட்டுப் பாருங்கள். அவர்களது அனுபவம் சொல்லும் பாடம் இதுவல்லவா?

நீங்கள் சொல்வது சரியே! கடவுளுக்கு முன் யார் நீதிமானாக முடியும்? என் மீது பழி சுமத்துபவரும், என் நீதிபதியும் அவரே. எனக்கு எப்படி நீதி கிடைக்கும்? என் மீது குற்றம் சுமத்துபவர் எனக்கு இரக்கம் காட்டுவாரா?

அவரது கரங்களே என்னை உருவாக்கின.

அதே கரங்களே என்னை மட்பாண்டம் போல உடைத்துவிட்டன.

நான் என் தாயின் கரங்களில் இருக்கும்போதே ஏன் என் கழுத்தை நெரிக்கவில்லை.

என்னைத் தனியாக விட்டு விடுங்கள். நான் சற்று சுதந்திரமாக சுவாசிக்கிறேன்.


உமது சிறந்த பேச்சாற்றல் உம்மை நீதிமானாக மாற்றாது. கடவுளைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? உமக்குக் கிடைக்க வேண்டியதில் பத்தில் ஒரு பகுதி தண்டனை கூட இன்னும் கிடைக்கவில்லை.
!?
மனம் வருந்தி ஆண்டவரிடம் திரும்பும். கைகளை உயர்த்தி மன்றாடும். அப்போது அவரது ஆசீரைப் பெறுவீர்.
?


உம்முடைய ஞானம்! மற்றவர்கள் கூறிய அதே பழைய கதையையே நீங்கள் திரும்பவும் சொல்கிறீர்கள். இதெல்லாம் எனக்கும் தெரியும்.
?!!
நான் மாசற்றவன், நீதிமான். இருப்பினும் நீங்கள் என்னை ஏளனம் செய்கிறீர்கள். நீங்கள் உடல்நலமுடன் செல்வந்தராக வாழ்கிறீர்கள். நீங்கள் என்னை இகழலாம். ஆனால், நான் என்ன தவறு செய்தேன் எனச் சொல்லுங்கள்


எனக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. நான் கடவுளிடம் கூட வாதாட தயாராயிருக்கிறேன்.
எல்லாம்வல்ல கடவுளே! உம் வலுவான கரங்களை என்னிடமிருந்து அகற்றிவிட்டு, என் வாதங்களுக்குச் செவிமடும்.
மரம் வெட்டப்படும்போது அது மீண்டும் தளிர்த்து வரும் என்ற நம்பிக்கை எப்போதும் உண்டு. ஆனால், நான் இறக்கும் தருணத்தில் எனக்கு என்ன நம்பிக்கை உள்ளது?


ரொம்பவும் சோர்ந்து போகாதீர். கடவுளிடம் ஏன் நீர் கோபப்படுகிறீர்?
உமக்கு கடவுள் பயமே இல்லை. எந்த மனிதனாவது கடவுள் முன் தன்னை நீதிமான் எனக் கூறமுடியுமா?
தீயில் எரிந்து போகும் காய்ந்த மரத்துண்டு போல தீயவர்கள் அழிவார்கள். எனவே மனம் வருந்தி, கடவுளிடம் திரும்பி வாரும்.


ஏன் என்னை இப்படி சித்திரவதை செய்கிறீர்கள்? கடவுள் என்னைத் தண்டித்தார் என்பது போதாதா? என் இடத்தில் நீங்கள் இருந்தால் என் வார்த்தைகளைப் புரிந்து கொள்வீர்கள்.
உங்களது பயனற்ற அறிவுரைகள் எனக்கு எந்த ஆறுதலும் தரவில்லை. நான் சமாதானமாக வாழ்ந்தேன். ஆனால் ஆண்டவர் என் கழுத்தை நெரித்து, தரையில் தள்ளி விட்டார்.
ஒரு பெரும் படை போல் அவர் என்னைத் தாக்கியுள்ளார்.


கல்லறைதான் எனது தந்தை. புழுக்கள் என் நண்பர்கள். எனக்கு ஏதாவது நம்பிக்கை உண்டா?
எனது கண்ணீர் கடவுளின் முன் எனக்காகக் கூக்குரலிடட்டும்.
நான் எந்த பாவமும் செய்யவில்லை என உங்களிடம் நூறு தடவை சொல்லிவிட்டேன். என் நண்பர்களான நீங்கள்கூட என்னைப் புரிந்து கொள்ள விரும்பவில்லை.
உம் பாவங்களை நினைத்து கண்ணீர் வடியும்.


உன்னுடைய துன்பங்களே நீ பாவம் செய்தவர் என்பதற்குச் சான்று இல்லையா? நீர் ஏழையின் மேலாடையை அடமானமாக எடுத்தீர்? அவன் குளிரால் சாகும் போதுகூட நீர் திரும்பக் கொடுக்கவில்லை.
!
பசியிலிருப்பவனிடமிருந்து அப்பத்தைப் பிடுங்கினீர். விதவைகளைச் சுரண்டி, அனாதைகளைக் கொடுமைப்படுத்தினீர். நீர் இன்னும் நீதிமான் என வாதாடுகிறீரா?
பொய், எல்லாமே பொய்.
?!!


தேவையிலிருக்கும் ஏழைகளைப் பார்க்கும் போதெல்லாம் நான் உதவியிருக்கிறேன். பசியாயிருப்பவர்களுக்கு உணவு கொடுத்திருக்கிறேன். அந்நியர்களுக்குத் தங்குமிடம் கொடுத்திருக்கிறேன். விதவைகளையும், அனாதைகளையும் பாதுகாத்திருக்கிறேன். அவர்கள்தான் என் சாட்சிகள்.
நான் என் வழக்கை கடவுள் முன் கொண்டுச் செல்ல விரும்புகிறேன். அவர்தான் என்னைக் கசக்கி பிழிந்துள்ளார். அவரே வரட்டும். அவரே வந்து எனக்குப் பதில் கூறட்டும்.
!!!

சுழல்காற்றின் மத்தியில் கடவுள் யோபுவுக்குப் பதிலுரைக்கிறார்.

?

என் திட்டங்களைக் கேள்வி
கேட்டு, சவால் விடுப்பவர் யார்?
நான் உன்னிடம் சில
கேள்விகள் கேட்கிறேன்.
பதில் கூறு.

நான் பூமிக்கு அஸ்திவாரமிட்ட
போது நீ எங்கே இருந்தாய்?
கடலுக்கு எல்லைகளை
அமைத்தவர் யார்?

நீ கட்டளையிட்டால் சூரியன்
உதயமாகுமா? பறவைகளுக்கு
வானில் பறக்க நீ வழி
காட்டிக் கொடுப்பாயா?


கடலின் ஆழம் உனக்குத் தெரியுமா? பூமியின் அகலம் உனக்குத் தெரியுமா? வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன என்பது உனக்குத் தெரியுமா? இருளின் உறைவிடத்தையும், ஒளியின் ஊற்றையும் நீ பார்த்திருக்கிறாயா?
?!
குதிரைக்கு வலுகொடுத்தது யார்? சொல்!
மீன் தூண்டிலால் முதலையை நீ பிடிக்க முடியுமா?


இத்தகைய சாதாரணமானவைகளைப் பற்றியே உனக்குத் தெரியவில்லை என்றால், என் திட்டத்தை நீ எப்படி தெரிந்து கொள்வாய்?
நான் இனிமேல் ஒரு வார்த்தை கூட பேசமாட்டேன். இவை எல்லாமே என் புரிதலுக்கு அப்பாற்பட்டவை.
நான் உம்மைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது தான் நான் உம்மை என் கண்களால் கண்டுள்ளேன். நான் கூறிய எல்லாவற்றையும் திரும்ப பெற்றுக் கொள்கிறேன். தூசியிலும் சாம்பலிலும் அமர்ந்து நான் மனம் வருந்துகிறேன்.
நான் யோபுவின் பற்றுறுதியைச் சோதித்தேன். அவன் பிரமாணிக்கமுள்ளவனாக இருந்தான். என்னைப் பற்றிய உண்மையை நீங்கள் கூறாமலிருந்ததற்காக மனம் வருந்தி பரிகாரம் செய்யுங்கள்.
உடனடியாக யோபு தன் உடல் நலத்தைத் திரும்பவும் பெறுகிறார்.
சகோதரரே, தயவுசெய்து எங்களை மன்னித்துவிடும். எங்களுக்காக கடவுளிடம் மன்றாடும்.
!

யோபுவின் செல்வங்களையும் கடவுள் திரும்பக் கொடுக்கிறார். அவர் பல குழந்தைகளையும் பல வழி மரபினரையும் காணும்படி நீண்ட ஆயுளையும் கொடுத்து அவரை ஆசிர்வதிக்கிறார்.




கடவுளுக்குத் தெரியும். ஆனால் யோபு தன் பிரமாணிக்கத்தை நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க விரும்பினார்.
அவர் பல குழந்தைகளை மீண்டும் பெற்றாலும், இறந்தவர்கள் திரும்பி வரவில்லையே.
இத்தகைய மகிழ்வான முடிவு இல்லாதோரின் கதி என்ன?
உங்களுக்கு இன்னும் புரியவில்லை. கடவுளின் திட்டங்களைப் பற்றி நமக்கு என்ன தெரியும்?
யோபுவைப் போல நாமும் துன்பங்களின் மத்தியிலும் பிரமாணிக்கமாயிருக்க வேண்டும். கடவுளின் திட்டத்தில் துரதிர்ஷ்டங்கள் கூட அவரது ஆசீராக மாறமுடியும்.
ஏழைகளிடம் இரக்கம் காட்டுவோரிடம் கடவுளும் இரக்கம் காட்டுவார்.
அடுத்த மாமனிதர்
தோபித்து

நம்புகிறார். யோபு கடவுளிடம் முறையிடுகிறார். ஆனால், கடவுள் அவருக்குப் பதில் கூறவில்லை. கடவுளின் மௌனம் யோபுவின் துன்பத்தைத் தாங்க முடியாத ஒன்றாக மாற்றுகிறது.

இறுதியாக, கடவுள் புயல் காற்றின் நடுவே தோன்றி, யோபுவிடம் பேசுகிறார். கடவுளின் குரலைக் கேட்டதும் யோபு மௌனமாகிறார். தனது துன்பத்திற்குரிய காரணங்களைப் புரிந்து கொண்டதால் அல்ல, மாறாக கடவுளின் வழிகள் நமது புரிதலுக்கு அப்பாற்பட்டவை என உணர்கிறார். மரபு சார்ந்த பதில்கள் தவறென நிரூபிக்கப்படுகிறது. புதிய விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. நீதிமான் துன்புறுவதே ஒரு மறைபொருள் என விளக்கப்படுகிறது.

துன்பம் பாவத்தின் விளைவு என விவிலியம் போதித்தாலும், அது துன்பப்படுபவரின் பாவமாக இருக்கத் தேவையில்லை. இறைவாக்கினர் எசாயா மக்களது பாவங்களுக்காக துன்புறும் ஒரு நீதிமான் பற்றிய உதாரணத்தைத் தருகிறார். (எசா 5:13 53:12). இயேசு உலகின் பாவங்களுக்காக சிலுவையில் பாடுபட்டு உயிர் விடுகிறார். நீதிமான் துன்புறுவதற்கான மிகப் பெரிய உதாரணம் இது ஆகும். இயேசுவின் இறப்பு உயிர்ப்பு வழியாக மட்டும் தான் நாம் துன்பத்திற்குரிய அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியும். எனவே, துன்பத்தை கடவுளின் சாபமாக அல்லது தண்டனையாகக் கருதும் பழைய ஏற்பாட்டுக் காலச் சிந்தனையைக் களைந்தெறிவோம். துன்பப்படுபவர்களைத் தீர்ப்பிடும் மனநிலையினை மாற்றியமைப்போம்.

கேள்விகள்

1. யோபு நூலின் முக்கிய சிந்தனை என்ன?
2. யோபு எல்லாவற்றையும் இழந்தபோது அவரது மனைவி என்ன கூறினாள்?
3. யோபுவைச் சந்திக்க வந்த மூன்று நண்பர்களின் பெயர்களைத் தருக.
4. அவர்கள் கருத்துப்படி யோபுவின் துன்பங்களுக்கான காரணம் என்ன?
5. யோபு சாக விரும்பியதை அவர்கள் எப்படி விளக்கினார்கள்?
6. யோபுவுக்கு அவர்கள் கூறிய அறிவுரை என்ன?
7. இந்தக் கதையில் யோபுவின் மாசற்றத் தன்மையைக் காட்டும் நிரூபணங்கள் யாவை?
8. யோபு கடவுளின் குரலைக் கேட்டவுடன் ஏன் மௌனமாகிறார்?
9. யோபுவின் துன்பத்தை கடவுள் எப்படி விளக்குகிறார்?
10. நீதிமான் துன்புறுவதை புதிய ஏற்பாடு எப்படி விளக்குகிறது?

விவிலியப் படக்கதைகள் (பழைய ஏற்பாடு)

1.காயின் & ஆபேல் 2. ஆபிரகாம் 3. யாக்கோபு 4. யோசேப்பு 5. மோசே 6. யோசுவா 7. சிம்சோன் 8. ரூத்து 9. சாமுவேல் 10. சவுல் 11. தாவீது 12. தாவீது அரசர் 13. சாலமோன் 14. எலியா 15. ஆமோஸ் 16. ஓசேயா 17. மீக்கா 18. எசாயா 19. எரேமியா 20. எசேக்கியேல் 21. செக்கரியா 22. யோனா 23. யோபு 24. தோபித்து 25. தானியேல் 26. சூசன்னா 27. எஸ்தர் 28. யூதித்து 29. மக்கபேயர்-1 30. மக்கபேயர்-2

அடுத்த மாமனிதர்

பல்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும்
யாவே மீது பற்றுறுதி கொண்டு வாழ்ந்து,
கைம்மாறு பெற்ற அருளாளர்



தோபித்து

First published in English: Fr. Micheal Karimattam, Illustration: Devasy & Benny.
Published in Tamil: Elphin & Theo,
Centre for Biblical Publications, 243, III,Main Road,
Venkatraman Nagar, Hasthinapuram, Chromepet, Chennai 600 064.
Tel : 0091.9840214232, 9159928634, Mail: Celestialpub@yahoo.com.

JAMES ARTS, SIVAKASI. 04562 - 278206